விலை: சதம் 75 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 22 முஹரம் 9 இதழ் 265
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-11-1981


## 36 மாணவர்களுக்கும் அனுமதி கிடைத்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் ஆசிரியர் கல்வித் தகுதித் தேர்வு நெறிக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட சகல ஆசிரிய மாணவர்களுக்கும் அனுமதி கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் ஆசிரியர் கல்வித் தகுதித் தேர்வு நெறிக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 38 ஆசிரிய மாணவர்களில் 26 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்த துரித நடவடிக்கையாலும் தமிழ் எம்.பி.க்கள் மேற்கொண்ட முயற்சியினாலும் ஜனாதிபதியின் தலையீடு காரணமாக மிகுதி பன்னிரண்டு ஆசிரிய மாணவர்களுக்கும் இப்பொழுது அனுமதி கிடைத்திருக்கிறது.

## அதிசய ஒற்றுமை!

மதுரை, நவ. 6

திருப்பத்தூர் சட்டமன்ற இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸை ஆதரிப்பதென்று அ. தி. மு. கழகம் தீர்மானித்துள்ளதாக தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இன்று மதுரையில் அறிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு தி. மு. கழகமும் ஆதரவு தெரிவித்துள்ளது. இத்தொகுதியில் 9 பேர் போட்டியிடுகின்றனர்.

# தமிழ்மொழி அமுல் சுற்று நிருபம்

## அமைச்சரவையில் தாக்கலாகும்

## சபையில் 'இராசு' தகவல்

(கொழும்பு)

தமிழ்மொழி அமுலாக்கல் பற்றிய சுற்று நிருபம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும் என்று பிரதேச தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரை நேற்று பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை பத்துமணிக்குக் கூடியது. ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதேச அமைச்சர் மேற்படி உறுதிமொழியைத் தெரிவித்தார்.

"மொழிப் பிரச்னையை 24 மணி நேரத்தில் தீர்த்துவைக்க முடியாது" என்று கூறிய அமைச்சர் திரு. செ. இராசதுரை மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ்மொழிக்கு அரசியலமைப்பில் 'இடமளிக்கப்பட்டுள்ளது. தேசியமொழியாக அங்கீகரிக்கப்பட்டு இதனை அமுல்படுத்த எனது அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி அமுலாக்கல் பற்றிய சுற்றுநிருபம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். அங்கீகாரம் கிடைத்ததும் வெளியிடப்படும். இவ் விஷயத்தில் ஊர்காவற்றுறை எம். பி. மிகுந்த அக்கறை செலுத்தி வந்தார். இனிமேல் எந்தவிதத் தாமதமும் ஏற்படமாட்டாது என்பதையும் இச்சபைக்கு உறுதியாக இறுதியாகக் கூறுகின்றேன்." என்று அமைச்சர் இராசதுரை தெரிவித்தார். ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்: நான் இச்சபையில் ஏற்கனவே நான்கு தடவைகள் கேட்டுவிட்டேன். இன்று ஐந்தாவது தடவையாகக் கேட்கின்றேன். இன்றும் வெறும் உறுதிமொழிதான். அரசியலமைப்பு ஒரு ஏட்டுச் சுரக்காய் இதனால் பலனில்லை. பிரதேச அமைச்சரை பிரச்சார அமைச்சர் என்று கூறுவது வழக்கம்.

சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் (குறுக்கிட்டு): "அரசாங்கம் உபயோகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது" என்று

(8-ம் பக்கம் பார்க்க)

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது

## சீமெந்து தொழிற்சாலை நிர்வாகச் சீர்கேடுகள்

### அமைச்சருக்கு மகஜர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள், வீண் விரயங்கள் நிலவுவதாக கைத்தொழில் அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு. ச. கணபதிப்பிள்ளை செயலாளர் திரு. நா. நடராசா ஆகியோரால் அமைச்சரிடம் மகஜர் மூலம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையை வளரவிட்டால் தொழிற்சாலையை மூடவேண்டிய அபாயம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படமுடியாது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அவர்கள் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது-

காங்கேசன்துறைத் தொழிற்சாலை ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்று வரைக்கும் நட்டமோ அல்லது உற்பத்தி குறைவோ ஏற்படவில்லை. இயந்திரங்கள் பழுதடைந்து போகப் போக உற்பத்தித்திறன் கூடியிருக்கிறது. குறிப்பாக புத்தளம், காலி தொழிற்சாலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பல மடங்கு திறமையாகவே நடக்கிறது.

இத்தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்களுடைய ஊக்கமின்மையால் உற்பத்தி குறையவில்லை என்பதையும் அவர்களுடைய முயற்சியாலும் அனுபவத்தாலுமே குறித்த உற்பத்தி இலக்கை மாதா மாதம் அடைந்துவருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிமெந்து கூட்டுத்தாபன உயர்மட்ட அதிகாரிகளின் பலவகைப்பட்ட சர்வாதிகார மனப்போக்கினாலும் அனுபவ

(8ம் பக்கம் பார்க்க)

## கடையில் என்னடா சேட்டை என்று விஜயன் கேட்டார்

### பொலிஸ் விசாரணையில் டாக்ஸிசாரதி சாட்சியம்

(சுண்டிக்குளி)

"முன்சீட்டில் இருந்த விஜயன் இறந்தவரான பிரேமனைப் பார்த்து' கடையில் என்னடா சேட்டை விட்டாய்" என்று கேட்டார் இதற்கு இறந்தவர் "நான் கடைப்படி கூட ஏறவில்லை எனக்கு ஒன்றும் தெரியாது" என்றார்.

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடியைச் சேர்ந்த எஸ். பிரேமானந்தனின் கொலை சம்பந்தமான பொலிஸ் விசாரணையில் டாக்ஸியின் 'சாரதியான சுப்பிரமணியம் ஜெயபாலன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கொலையில் சம்பந்தப்பட்ட சுமார் 6 சந்தேக நபர்களில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

(8ம் பக்கம் பார்க்க)

## போதை தந்த பரிசு!

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் நடமாடி தொல்லைகொடுத்ததாக யாழ். பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட ஆறு இளைஞர்கள் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர் இவர்களில் இருவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் திரு. ஜோகநாதன், யாழ். ஆஸ்பத்திரிக்கு இரத்ததானம் வழங்குமாறு அவர்களிருவருக்கும் உத்தரவிட்டார்.

சுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன், லக்ஷ்மன் கனகரத்தினம் ஆகிய இருவருமே இரத்ததானம் வழங்கியவர்களாவர். மற்றைய நால்வரான எஸ். முருகையா, கே. கனகேஸ்வரன், ஏ. அருணாசலம், எஸ். தியாகராசா ஆகியோரை 50 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்ட நீதவான் 82-ம் ஆண்டு தைமாதம் 15-ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (மா)

## உலகத் தமிழர் மகாநாட்டில் 'அமிர்'

சென்னை, நவ. 6

உலகத் தமிழர் முன்னேற்ற மகாநாடு இன்றும், நாளையும் சென்னை பெரியார் திடலில்

(8-ம் பக்கம் பார்க்க)

## "ஆகஸ்ட் 1—20 வரை 16 பேர் கொலை செய்யப்பட்டனர்"

### பிரதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

"ஆகஸ்ட் முதலாம் திகதிக்கும் 20ந் திகதிக்குமிடையில் 16 பேர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 3 பேர் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள்"

பிரதிபாதுகாப்பு அமைச்சர் திரு வேரப்பிட்டிய நேற்றுப் பாராளுமன்றத்தில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். தலைவரான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம ஆகஸ்ட் 1ம் திகதியிலிருந்து 20ம் திகதிக்குள் எத்தனைபேர் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டிருந்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இக்குற்றங்கள் பற்றி விசாரணைகள் நடைபெற்றுவருவ

(8-ம் பக்கம் பார்க்க)


ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துர்மதி வருடம் ஐப்பசி மாதம் 24-ம் நாள் (9-11-81) திங்கட்கிழமை பகல் 9-42 மணி முதல் 10-54 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திர தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| இரவீந்திரன் | இலிங்கேஸ்வரி |
| (வை. துரையப்பா அடைவு கடை யாழ்ப்பாணம்) | (கட்டிடத் திணைக்களம் வவுனியா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| ஐ. நாகரத்தினம், | சி. இராசையா, |
| (அதிபர், சண்முகநாதன் வித்தியாசாலை) | பொன்னம்பலம் ஒழுங்கை, |
| "இரதி பவனம்" | உடுவில் வீதி, |
| புங்குடுதீவு: 1. | மானிப்பாய். |

வை. துரையப்பா தம்பதிகள்

சி. எஸ். கே. மில் விதாயனத்தினர்.

ஆர். எஸ். அச்சகத்தினர் 1389

### மணிவாக்கு

வினைப்பயனை விதியென்றும் ஊழ் என்றும் மாந்தர் மொழிகின்றனர். ஆனால் புதிய வினையினால் பழைய வினையின் வேகத்தைத் தடுக்கலாம், அல்லது மாற்றலாம், அல்லது தணிக்கலாம்.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## குடும்ப நலத்திட்டம்

பல நாடுகளில் பல வேறுபாடான — விபரீதமானதுகூட கருத்துக்களைக் குறிக்கும் குடும்ப நலத்திட்டம் தமிழ்மக்களைப் பொறுத்தளவில் அவர்களின் பண்டைய பண்பாட்டில் அமைந்திருக்கிறது.

ஒருவன் அடையக்கூடிய எல்லாப் பாக்கியங்களுக்குள்ளும் பெரும்பாக்கியமாகும், தான்பெற்ற மக்கள் அறிவடைந்து வளர்வதைப் பார்க்கும் மகிழ்ச்சி.

மக்களைப் பெற்றுக்குவிப்பதை தமிழ் முனிவர் எங்கும் ஆதரித்ததில்லை. அவர்கள் எல்லா அறிவையும் அடைந்து நல்ல மக்களாக விளங்கவேண்டும் என்கிறார். அப்படி இல்லாவிடில் துன்பத்துக்குக் காரணமாவார்கள் என்பது குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

முனிவர் குறிப்பிட்ட பொதுவுடைமையைச்செயற்படுத்தி இன்பம் காண்பவர்கள் மேனாட்டவர். உலகில் வளர்ச்சியடைந்த சோஷலிஸ நாடுகள், இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளும் ஆபிரிக்காவின் பல நாடுகளும் குடும்ப நலத்தைப்பேணும் வாய்ப்பற்று வாளாவிருக்கின்றன.

இன்று எங்கும் பிரசாரம் பெற்று நடைமுறையில் காணப்படும் குடும்பக்கட்டுப்பாட்டை மேனாட்டு கிறிஸ்தவ, கத்தோலிக்க நாடுகள் மத அடிப்படையில் எதிர்த்துவருகின்றன; ஆனால் அவை வளர்ச்சியடைந்த நாடுகளென்ற ரீதியில் குடும்பநலம் பேணப்படுகின்றது.

எவ்வாறென்பது விளக்கத்துக்குரியது; பொருளாதார விருத்தியால், கல்வி வேலைவாய்ப்புப் பெற்று சிறந்த குடும்பவாழ்க்கை வாழப்பழகியவர்கள் இயற்கையாகவேசிறுகுடும்பத்தை நாடுகின்றனர். ஜனத்தொகை தானாகவே கட்டுப்படுகின்றது. தாங்கள் அனுபவிக்கும் சுகநலங்களை பெரும் குடும்ப அல்லல்களில் இழக்க அவர்கள் என்றும் விரும்பமாட்டார்.

அந்த நாடுகளின் நிதி உதவியை வேண்டி நிற்கும் வளர்முக நாடுகள் தங்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இன்றியமையாத ஜனத்தொகைக் கட்டுப்பாட்டை தக்கமுறையில் அமுல் நடத்தி வெற்றி காண முடியவில்லை.

ஒன்றரைக்கோடி மக்கள் வாழும் இச்சிறு தீவை உதாரணமாக எடுப்பது பொருத்தமில்லை. சுமார் அறுபது கோடி மக்கள் வாழும் அண்டைநாடாகிய இந்தியா குடும்பநலத் திட்டத்தை துரிதப்படுத்த முயன்ற போதும் இன்றும் அதனைச் சமாளிக்க இயலாத கட்டத்தில் வெளிநாட்டு நிதி உதவியில் தஞ்சம் கோருகின்றது.

இந்தியாவிலும் இலங்கை போன்ற நாடுகளிலும் குடும்பக்கட்டுப்பாட்டை இறைமையாகத் தொழிற்படுத்த மதத்தடைகள் பெருமளவில் இல்லை; ஆனால் மேனாடுகளைப் போல் அபிவிருத்தியில் தன்னிறைவு காணுவதையும் அதனால் வரும் நன்மைகள் குடும்ப நலனுக்கு சாதகமாக விருக்குமென்பதையும் எமது பொதுமக்கள் நன்கு உணரவில்லை.

கல்விவளர்ச்சி பரவிய நாடு என்று இலங்கையை சொல்லிக்கொள்கிறோம். இலவசக் கல்விமுறையில் எழுத வாசிக்க தெரிந்தால் போதுமல்ல; குடும்பத்தைக் குழைக்கவல்ல பலன்தரும் கல்வி நாட்டின் அபிவிருத்திக்குதவும். படித்துப் பட்டம் பெற்றவர் லிகிதர் வேலைகளைத்தேடி அலைகின்றனர் நமது நாட்டில் 14 வயதுக்குட்பட்ட இளைஞர்களுள் 30 வீதத்தினர் பாடசாலை செல்வதில்லை என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

கட்டாயக் கல்வியால், தொழில் திறமை ஊட்டுங் கல்வியால் நாட்டை முன்னேற்றலாம் அவ்வித முன்னேற்றங்களில் ஈடுபடும் படித்த தொழிற்றிறமை உள்ள மக்களின் குடும்பம் இயற்கையாகவே சிறு குடும்பமாக அமையும்.

எனவே குடும்பநலத்தைப் பற்றி அரசாங்கம் திட்டமிட்ட உத்தியோகத்தோரணையில் ஈடுபடும் அதிகாரிகள் மூலம்பொதுமக்களுக்கு விளக்கி வெற்றி காண்பது முயற்கொம்பு.

கல்வி வசதிகள், வேலை வாய்ப்புகள் ஒருபுறம்; மக்களுக்கேற்ற வகையில் விஞ்ஞானரீதியில் அவர்களின் உணர்வைத் தூண்டக்கூடிய தொண்டர்களின் பிரசார சேவை மறுபுறம், இவை பலனளிக்கும்

குடும்பக்கட்டுப்பாட்டுக்குரிய இயற்கை வழிகளை மக்கள் மனத்தில் பதித்து அவர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படுத்தல் உத்தமம்.

சாதாரண மக்கள், கல்வியறிவுடையவர்கள்கூட இதில் நம்பிக்கை வைப்பது சாத்தியமென்று கொள்ள முடியாது எனவே இத்தெய்வீக முறையை அரசுகள் நம்பி வீண்போகலாகாது. தெளிவான விஞ்ஞானரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது

ஆனமுதலில் அதிகஞ் செலவாகும் நிலையும், அதனால் மானமிழந்து மதிகெட்டுப்போகும் நிலையும் வறிய நாடுகளை எதிர்நோக்குகின்றன.

காலத்துக்குக்காலம் ஏற்படும் உலகயுத்தமும், பயங்கரநோய் பரவுதலும், ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாமா?

2118 கோடி ரூபாவைப் பற்றாக்குறையாகக்கொண்ட எங்கள் நாட்டின் அடுத்த வருட வரவு செலவுத்திட்டம் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த சரிதமாக உழைத்தால், இனிப்பிறக்கும் சந்ததியினர் கடனற்ற வாழ்வு வாழ முடியுமல்லவா?

# 150 மா மூடைகள் மறைந்த மாயம்!

## விசாரணை நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் விநியோகத்திற்கென யாழ்ப்பாண உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் திருகோணமலையிலிருந்து தருவிக்கப்பட்ட ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியுள்ள நூற்றைம்பது மூடைகள் மா இதுவரை காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திற்கு சென்றடையவில்லையென்றும் இதில் மோசடி நடந்துள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:

கடந்தமாதம் யாழ்ப்பாண மாவட்ட மக்களின் விநியோகத்திற்காக சுமார் மூவாயிரம் தொன் மா திருகோணமலையில் உள்ள 'பிறிமா' ஆலையிலிருந்து லொறிகள் மூலம் தருவிக்கப்பட்டு, வடபகுதியில் யாழ்ப்பாணம், நாவற்குழி, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உள்ள உணவுக் களஞ்சியங்களில் இறக்குமதி செய்யப்பட்டன.

உணவு இலாகாவின் காங்கேசன்துறை களஞ்சிய பொறுப்பதிகாரி தனது களஞ்சியத்திற்கு வந்து சேரவேண்டிய நூற்றைம்பது மூடைகள் மா மாதம் ஒன்றாகியும் தம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளாராம்

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை கொண்டுவந்து ஒப்படைக்கும் ஒப்பந்தகாரர்களின் பட்டியல்களைப் பரிசோதித்தபொழுது இம் மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்

இந்தப் போக்குவரத்து ஒப்பந்தகாரர் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல் ஏற்றுமதிவேலைகளில் இவ்வருடம் ஈடுபட்டதினால் அவர்களின் நிலுவைப்பணத்தை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட்டு பூர்வாங்க விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் இவ்விஷயம் உணவு ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## நவீன உடை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை இறுதியாண்டு மாணவிகளால் ஒரு நவீன உடைகள் பொருட்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இக்காட்சியில் பலவேறு வகையான அமைப்புக்களைக் கொண்ட பெண்களுக்குரிய உடைகள், தலையணைகள், மேசை விரிப்புக்கள் ஆகியன காட்சிக்கு வைக்கப்பட்டன. புதிய புதிய வடிவங்கள், சித்திரங்கள் என்பன இவற்றில் தைக்கப்பட்டிருந்தமை பலரையும் கவர்ந்தன. நல்லதொரு முயற்சியென எல்லோராலும் இக்காட்சி பாராட்டப்பட்டது. இது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மனையியல் விரிவுரையாளர் திருமதி சத்தியதேவி செல்வராசாவினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## கிளிநொச்சியில் கலைவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டார பாடசாலைகளின் கலைவிழா கிளிநொச்சி பட்டின சபை மண்டபத்தில் யாழ் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம் 'மன்சூர் தலைமையில் இம்மாதம் 9ம் தேதி நடைபெறும்.

கிளிநொச்சி எம் பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## பரிசளிப்புவிழா

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் நவீன ஈஸ்வரி சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் நாளை மாலை வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் தெல்லிப்பழை தந்தைசெல்வா பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. கே. சிவநேசன் தலைமையில் நடைபெறும். வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பரிசளிப்பு உரை நிகழ்த்துவார். சிவநெறிப்புரவலர் திரு க. கனகராசா ஆசியுரை வழங்குவார். திருமதி கமலா திருநாவுக்கரசு பரிசில் வழங்குவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## துர்க்காதேவி ஆலயத்தில் சமயத்தீட்சை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் திங்கட்கிழமை சமய தீட்சை நடைபெறவிருக்கின்றது.

ஒன்பது வயதுக்குமேற்பட்ட சிறுவர் சிறுமியர் உட்பட 50வயது வந்தவர்கள் கூட இந்தச் சமயதீட்சை பெற்றுக்கொள்ள முன் வந்துள்ளனர் என்றும் அன்றுகாலை 9-30மணிக்கும் 11-00மணிக்கு மிடையில் இவ்வைபவம் நடைபெறும் என்று ஆலய பிரமுகர் ஒருவர் கூறினார்.

சரவணாய் தெற்கு வணக்கத்துக்குரிய திருஞான சம்பந்தக்குருக்கள் இந் நிகழ்ச்சியை நடாத்திவைப்பார். தொடர்ந்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவர்களுக்குரிய அனுட்டானப் பயிற்சியை சொல்லிக்கொடுப்பார்.

## சோவியத்யூனியன் தான் இனப்பிரச்னைக்கு முதலில் தீர்வுகண்ட நாடு

(யாழ்ப்பாணம்)

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி சோவியத் மக்களுக்கு மாத்திரமின்றி உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. சகல சுரண்டல் வடிவங்களையும் அடக்குமுறைகளையும் ஒழித்து பல்லாயிரம் ஆண்டுகளாக தொழிலாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் ஆசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசு உதயமாவதற்கு அக்டோபர் புரட்சி உதவியது. பாட்டாளிவர்க்கத்தின் வாழ்வு உயர பொருளாதார ரீதியான விடுதலையை முக்கியமாக இது வழங்கியது.

இவ்வாறு லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ். பிரதேசக் கிளையின் செயலாளர் திரு. எஸ் விஜயானந்தன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

சோவியத் யூனியன் என்னும் சிறப்பு மிக்க சோசலிச அரசு மாபெரும் அக்டோபர் புரட்சியின் மூலம் தோன்றியது. உலகசரித்திரத்தில் புதிய திருப்புமுனை ஏற்பட்டதென்றால் அதற்கு முக்கிய காரணியாக அமைவதும் இப்புரட்சிதான். மாக்சீய லெனிஸசத்தின் உயர்ந்த கொள்கைகள் லட்சயங்களை செயல் வடிவில் அமைத்து பொருளாதார தேவைகளை உறுதிப்படுத்தி சோசலிசம் தேசிய சுதந்திரம் ஜனநாயகம் சமூக முன்னேற்றம் சகோதரத்துவம் போன்றவற்றை உணரவைத்து செயல்படுத்தியது என்று குறிப்பிட்டுள்ள திரு. விஜயானந்தன் மனிதகுல வரலாற்றிலேயே முதல்தடவையாக சோவியத் யூனியன்தான் தேசிய இனப்பிரச்னைக்கு முற்றுமுழுதான தீர்வைக் கண்ட நாடாகும். சோவியத் யூனியனில் குடிமக்கள் அனைவரும் தேசிய இனம் நிறம்மொழி வேறுபாடின்றி சமஉரிமைகளை அனுபவிக்கின்றனர் இதற்கெல்லாம் மூலகாரணம் மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியே என்று தெரிவித்துள்ளார்.

## வ. இ. சங்கீதசபை பரீட்சை விதிகளில் மாற்றம் செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபையினால் வெளியிடப்பட்ட பரீட்சை விதிகளில் மாற்றம் ஒன்றை செய்யும்படி கோரி யாழ் பெற்றோர் சிலர் மகஜர் ஒன்றை கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளனர். அந்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:

வட இலங்கைச் சங்கீத சபையினால் வெளியிடப்பட்ட பரீட்சை விதிகளின் படி முக்கிய குறிப்பு என்ற பகுதியில் ஐந்தாம், ஆறும் ஆண்டுகளுக்குரிய பரீட்சைக்குத் தோற்றுவோர் 1982ம் ஆண்டுதொடக்கம் கட்டாய பிரதான பாடத்தோடு உப பாடமாக இன்னுமொரு பாடத்துக்கு தோற்றி சித்தியடைய வேண்டும் என்ற புதிய விதியாக அமைகிறது. இது வரவேற்கத்தக்கது. ஆனால் பகுதி 'அ' பகுதியில் ஐந்தாம் ஆறும் ஆண்டுப்பரீட்சைக்கு தோற்றுவோர் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரணப் பரீட்சையில் தமிழ்/கணிதம் உட்பட சித்தி பெற்றிருப்பதுடன் சங்கீதத்திலும் இன்று வேறு இரு பாடங்களிலும் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிபந்தனை ஐந்தாம் ஆண்டுக்கு இல்லாமல் ஆறும் ஆண்டுக்கே பொருத்தமாகும். ஆதலினால் இந்த நிபந்தனையை ஆறும் ஆண்டுக்கே கட்டாயமாக்கினால் மிகவும் வரவேற்கத்தக்கது. சங்கீத நாலாம் ஆண்டு சித்தியடைந்த பல மாணவர் ஐந்தாம் ஆண்டு எடுப்பதற்கு க பொ த. சாதாரண தரம் பரீட்சையில் குறிப்பிட்ட தகுதியை அடைய பல ஆண்டு காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் அவர்களின் சங்கீத ஆர்வமும் இல்லாது போக வேண்டிய நிலையை ஏற்படுகிறது. நாலாம் ஆண்டுசித்தியடைந்த மாண

8-ம் பக்கம் பார்க்க!

# ...தேசிய தினம் ★

...ப்பு மலர் —

## ...ல், ஆனந்தம்!

...அடிப்படையில் மாற்றி ...ப்பட்டன. சுரண்டலை ...உறவுகளை ஒழித்துக் ...ம், சமாதானம், ...தேசம், விடு ...சகல மக்க ...சகோதரத்துவம் ...ற்றக் கொண்ட ஒரு ...த்தை நிர்மாணித்தது ...ரலாற்றின் படிப்பினை ... உலக வரலாற்றின் ...டையாக மாறியுள் ...ற்றின் முற்போக்

ளுக்கு காலத்தில் அனுகூலமற்ற தாயிருந்த போதிலும், விவசாயத்தின் சராசரி வருடாந்த உற்பத்தி 9 சத வீதத்தால் உயர்ந்துள்ளது. மக்களது வாழ்க்கைத் தரமும் கலாசாரத் தரமும் இடையறாது உயர்ந்துகொண்டு செல்கிறது. தனிநபரின் மெய்யான வருவாய் உயர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதியில் ஏறத்தாழ நாட்டின் ஜனத்தொகையில் பாதிப்பேர் 100 ரூபிள்களுக்கும் கூடுதலாக மாதாந்த வருவாயைக் கொண்டிருந்தனர். 1970 இதே வருவாயை ஜனத்தொகையில் 18 சதவீதமானவர்களே பெற்றனர். தொழிற்சாலை, காரியாலய ஊழியர்களின் வருவாயும் ஊதியமும் 16 சத வீதத்தால் உயர்ந்தன. கூட்டுப்பண்ணை விவசாயிகளது வருவாய் சோஷலிஸ பொருளாதாரத்தில் இருந்த 26 சத வீதமாக உயர்ந்தது.

தேசிய பொருளாதாரத்தின் தொடர்ந்த சீரான அபிவிருத்தி செய்வதும் சோவியத் மக்களது நல்வாழ்வை மேலும் உயர்த்துவதும் தான் நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தின் (1981-1985) நோக்கமாகும். 1990-ம் ஆண்டிக்

யுத்த பிற்கால கட்டத்தில் உலக சோஷலிஸ அமைப்பின் தோற்றமானது, உலக சக்திகளின் சமநிலையை, சமாதானத்திற்கும் சோஷலிஸத்திற்கும் சாதகமாகத் திருப்பியது. உலக சோஷலிஸ சமாஜமானது நல்லதொரு சர்வதேச அரசியல் சூழலை உருவாக்குவதற்காகத் தீவிரமாக உழைக்கிறது. அறிவார்ந்த வாழ்க்கைக்கும் உலக நாகரிகத்தின் சாதனைக்கும் அச்சுறுத்தல் விடும் வகையில் வெகுஜனப் பேரழிவு ஆயுதங்கள் பாரிய அளவில் குவிக்கப்பட்டுள்ள இன்றைய வேளையும் இந்த உழைப்பு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது.

மாபெரும் அக்டோபர் புரட்சி, "சமாதானம்", "சோஷலிஸம்" ஆகிய பதங்களை இணைத்தது. தொழிலாள வர்க்க சர்வாதிகாரக் கோட்பாட்டுடன் சமாதானத்துக்கு உழைப்பது என்பது சோவியத் வெளிநாட்டுக்கொள்கையின் பிரதான அம்சமாயது. சோஷலிஸ வெளிநாட்டுக்கொள்கையின் தலையாய குறிக்கோள் சமாதானமே. லெனின் வருமாறு எழுதினார்: 'உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியானது மனித சமூகத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் மிருகத்தனமான சாதனம் என்ற யுத்தத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.' அதனால்தான் முதல் தடவையாக சமாதானத்துக்கான

# தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு!

சோஷலிஸப் புரட்சிப் பாதையில் கைகூடிய அரசியல், பொருளாதார ஆதாரங்களை உறுதி செய்வதற்கும், புதியதோர் சமுதாயத்தைக் கட்டி உருவாக்குவதற்கும், உழைப்பாளி மக்கள் எந்த தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் சரி அவர்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை சோவியத் ஆட்சியை வலுவாக்குவதற்கான போராட்டத்தின்போது வி. இ. லெனினும், கட்சியில் இருந்த அவரது சகாக்களும் மிகவும் தெளிவாகக் கண்டனர். முதலாளித்துவமானது உழைப்பாளி மக்களின் வர்க்கத்துக்கும், அவர்களது தேசிய இனத்துக்கும் ஏற்றவாறு அவர்களிடையில் பிரிவினைகளை உண்டாக்கியது. ஆனால் சோஷலிசமானது உழைப்பாளி மக்களின் சோதர ஒருமைப்பாட்டினை அவர்களது சக்திகளின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டது என்று அவர்கள் வலியுறுத்தினர்.

பல தேசிய இன யூனியன் அரசு தோற்றுவிக்கப்பட்டது. பனனுறுதி மிக்க அதன் ஜனநாயகக் கோட்பாடுகள் வலியுறுத்தப்பட்டது. ஆகிய இவை சோஷலிஸ அமைப்பின் சர்வதேசியத் தன்மையிலேயே நிர்ணயிக்கப்பட்டவையாகும். அது தேசிய உறவுகள் சம்பந்தமான துறையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம் உயிர்த்துடிப்புடையதாகவும், விஞ்ஞானமாகவும் கைகூடியுள்ளதைக் குறிப்பதாகும்.

முக்கியத்துவமுடையதாகும். சமத்துவ அடிப்படையில் அமைந்த புதுரகமான உறவுகளை நிறுவவும், அவற்றை உறுதியாக்கவும் கம்யூனிஸ்டுக் கட்சி பாடுபட்டது. இவ்வாறாக 1919ல் அதாவது கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தில் தமது தலைமையை நிலைநாட்டிக்கொண்டபின்னர் 8-வது காங்கிரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியின் இரண்டாவது வேலைத்திட்டமானது ஒடுக்கப்பட்ட அல்லது உரிமை மறுக்கப்பட்ட தேசங்களின்

டுக்கு அமைத்திக் இரண்டாவது காங்கிரஸ் "சமஷ்டி" என்பது தேசங்களின் பூரண ஒற்றுமையைச் சென்றடைவதற்கான இடைக்கால வடிவமேயாகும் என்று லெனின் தனது ஆரம்ப நகல் அறிக்கைகளில் குறிப்பிட்டார்.

பின்னர் வந்த டிரான்ஸ்காகேசிய, மத்திய ஆசியக் குடியரசுகள், யூனியன் குடியரசுகளாவதற்கு முன்னர் சுயாட்சி அல்லது சமஷ்டி போன்ற பல கட்டங்களைக் கடந்து வந்துள்ளன என்பதை 15 அல்லது 16 ஆண்டுகால வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

மாஸ்கோவில் 1922 டிசம்பர் 30-ம் நாள் சோவியத்

( போரிஸ் லியோந்தியேவ் )

உழைப்பாளி மக்களிடையே நிலவும் தேசிய உணர்ச்சிகள் சம்பந்தமாக விசேட எச்சரிக்கை காட்டப்படுவது மிகவும் அவசியம் என்று கூறிற்று.

உஸ்பெக்கிஸ்தான், தாஜிகிஸ்தான், துர்க்மேனியா, கிர்கிஸியா, கஸாக்ஸ்தான் ஆகிய இவை 1917-ம் ஆண்டுக்கு முன்னர் ஜாரிசக் காலனி ஆதிக்கவாதிகளின் உடமையாக இருந்தன. ஆனால் முக்கியமாக 19-வது நூற்றாண்

யூனியனின் சோவியத்துகளது முதலாவது காங்கிரஸ் தொடங்கியது. அது சோவியத் சோஷலிஸ குடியரசுகளின் ஒன்றியத்தை உருவாக்குவதற்கான ஓர் ஒப்பந்தத்தைப் பற்றி விவாதித்து அதை ஏற்றுக் கொண்டது. இதில் ஆரம்பத்தில் ரஷ்ய, உக்ரேன், பைலோ ரஷ்ய, டிரான்ஸ்காகேசிய ஆகிய சோவியத் சோஷலிஸ சமஷ்டிக் குடியரசுகள் சரி சமத்துவ அடிப்படையில் இணைந்து இருந்தன.



சோவியத் ஜனாதிபதி பிரெஷ்னேவ்

டின் இறுதியில் உலகப்புரட்சி இயக்கத்தின் [illegible] சக்திகளில் ஒன்றாக மாறிய ரஷ்யத் தொழிலாளர்கள் [illegible] சமூக வாழ்க்கையின் வளர்ச்சியிலும் [illegible] உழைப்பாளி மக்களின் அரசியல் உணர்வைக் கிளர்ந்தெழுவதிலும் முற்போக்கான செல்வாக்கைச் செலுத்தினர்.

அக்டோபர் புரட்சி வாகை சூடிய பின்னர் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையிலும் அதன் தலைவரான வி. இ. லெனின் தலைமையிலும் இருந்த தொழிலாளர்களும் குடியானவர்களும் பின்தங்கி இருந்த எல்லையோரப் பகுதிகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்குப் பெரும் பணியாற்றினர்.

சமஷ்டிக் கோட்பாட்டுக்கு நாடுகளின் சமஷ்டிக்கு லெனின் மாபெரும் முக்கியத்துவம் அளித்தார். தேசியப் பிரச்னைகள் அல்லது நாடுகள் பிரச்னைகள் சம்பந்தமாக கம்யூனிஸ

துருக்கிஸ்தான் சோவியத் சோஷலிஸக் குடியரசு ஆரம்பத்தில் ரஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசில் ஒரு பகுதியாய் சுயாட்சிக் குடியரசாக இருந்தது.

1924 செப்டம்பர் 16-ல் கூடிய துருக்கிஸ்தான் மத்திய நிர்வாகக் கமிட்டியின் 3-வது விசேடக் கூட்டத்தொடர், உஸ்பெக்குகள், துர்க்மேனியர்கள், கிர்கீஸியர்கள், தாஜிக்குகள், கஜாக்குகள் ஆகியோருக்கு துருக்கிஸ்தான் சுயாட்சி சோவியத் சோஷலிஸ குடியரசிலிருந்து விலகிச் செல்லவும் தமது தேசிய அரசுகளை அமைத்துக் கொள்ளவும் உரிமை உண்டு என்று லெனினிய தேசியக் கொள்கைக்கு ஏற்ப முடிவு செய்தது. இவ்வாறே உஸ்பெக் சோவியத் சோஷலிஸ குடியரசும், துர்க்மேனிய சோவியத் சோஷலிஸக் குடியரசும் தோன்றின. மத்திய ஆசியாவைச் சேர்ந்த கிர்கீஸிய

(6-ம் பக்கம் பார்க்க)

...ன்

(...ஸ்தானிகர்)

...திற்கு புதிய ...ஸ நாகரீகம் செய்த ...யை உள்நாட்டு வெளி ...சங்களின் மூலமே ...முடியும். உள் ...சங்கள் எனும் ...அதை, மக்களது ...தார கலாசார நல ...யும் தனிநபரது சர் ...வளர்ச்சிக்கான நிலை ...யும் உத்தரவாதப் ...கண்ணோட்டத்தி ...வெளிநாட்டு அம்சங்களை ...முற்போக்கான

# ...ப் புரட்சியின் 64-வது ஆண்டு

...தின் கண்ணோட்டத் ...பார்க்கலாம். ...த்தில் மிகக் குறுகிய ...ட்டத்தில், மிகப் பின் ...இருந்த இந்தப் பரந்த ...நாடு, வளர்ச்சி பெற்ற ...தொழிற்துறையும் விவசா ...கொண்ட மிகவும் ...த நாடுகளில் ஒன் ...இடம் பெற்றது. உல ...தொழில்துறை உற்பத்தி ...20 சத வீத ...சோவியத் யூனியன் ...கொண்டிருக்கிறது. உழவு யந் ...கனிஜ வரங்கள், ...ளுக்கு, எண் ...மின்சாரி, இருப்புத் ...உற்பத்தி உற்பத் ...விய பொருளா ...முதலை மூலதன ...ம் வீடமைப்பு நிர் ...திலும், உற்பத்தி வீத ...யிலும் வெகுஜனங் ...வாழ்க்கைத் தரத்தின ...தன்மையிலும் ...த் யூனியன் உலகில் ...நிலை வகிக்கிறது. ...ளி ஆய்வு, அணுசக் ...க்கத்துறையில் பயன் ...வது, மற்றும் இதர ...விலும் சோவியத் விஞ் ...தொழில்நுட்பமும ...சாதனைகள் பலவ ...தெரிந்தவை.

...த் கம்யூனிஸ்ட் கட் ...26-வது காங்கிரஸில் ...காட்டப் பட்டது ...10-வது ஐந்தா ...டக் காலத்தில் 1976- ...சமுதாயத் ...சகல துறை ...அம்சங்களிலும் ...பெற்று ...9-வது ஐந்தாண்டுத் ...காலகட்டத்துடன் ஒப் ...தேசிய வருவாய் ...கோடி ரூபிள்கள ...தொழில்துறை உற்பத்தி ...கோடி ரூபிள்களா ...கரித்துள்ளது ஐந் ...ளில் முன்னுள்ள

சோவியத் யூனியன் தேசிய வருவாய் குறைந்தது 14 மடங்கினால் உயரும் தொழில் துறை உற்பத்தி 26-27 சத வீதத்தினாலும் விவசாய உற்பத்தி 12-14 சதவீதத்தினாலும் உயரும். தாய்மாரினதும் புதிய தலைமுறையினரதும் வாழ்க்கையை அபிவிருத்தி செய்ய புதியதும் பரவலானதுமான பல திட்டங்களைச் செயல்படுத்த அரசாங்கம் ஆலோசித்துள்ளது. இதன் முதற் கட்டமாக குழந்தைகளைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு அரசாங்க மானியமாக அளிப்பதற்கு 900 கோடி ரூபிள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த நிதிகள், குழந்தை ஒரு வயதை அடையும்வரை அதைப் பராமரிப்பதற்காக தாய்க்குச் சம்பளத்துடன் கூடிய ஒரு பகுதி விடுமுறையை வழங்குவதற்காக 1981-1983-ல் பயன்படுத்தப்படும்.

சமுதாயத்தின் சகல அங்கத்தவர்களினதும் நல்வாழ்வு, சர்வாம்ச வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவைதாம் சோஷலிஸ நாகரீகத்தின் சாராம்சத்தை மலாவித்த அடிப்படை அம்சங்களாகவுள்ளன.

சர்வதேச ரீதியாக, புதிய நாகரீகமானது எதிர்கால மனிதகுலத்திற்கு மெய்யான நம்பத்தகுந்ததுமான உதாரணத்தை அளித்தது. இன்று மனித குலம் எதிர்கொண்டுள்ள பல பிரதானமான பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காணுவதில் சோஷலிஸ நாடுகள் [illegible] செல்வாக்கும் அதில் அவை [illegible] பங்குபற்றிய தமே இதற்குக் காரணம். நவீன நாகரீகத்தின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் பாஸிஸத்தைத் தோற்கடிப்பதில் சோவியத் யூனியன் வகித்த தீர்மானமான பங்களிப்பை யாவரும் அறிவர்.

போராட்டம், அரசியலமைப்புக் கோட்பாட்டை மாற்றி, சோவியத் யூனியனின் அரசியல் யாப்பில் சட்டரீதியான இடத்தைப் பெற்றது. 'இந்த ஆலோசனைகள் அனைத்தும் ஓர் இலட்சியத்தையே கொண்டுள்ளன: அணுவாயுத யுத்த அபாயத்திலிருந்து மக்களை விடுவிப்பது, உலக சமாதானத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றுக்காக முழுத்தகைமையையும் செய்யும். நமது அபிலாஷைகள் இந்த லட்சியம், சமாதானத்தைப் பாதுகாப்பதைத்தவிர வேறு அதிபிரதானமான பணி எதுவும் நமது கட்சியின், நமது மக்களின், உண்மையில் உலக மக்கள் அனைவரின் சர்வதேச ரீதியிலான திட்டத்தில் இல்லை. ஒளிமயமான எதிர்காலத்திற்கான திறவுகோல் சமாதானத்தை வலுப்படுத்துவதேயன்றி, மக்களின் பொருளாதார ஆன்மிக செல்வம் அர்த்தமற்று வீண் விரயமாக்கப்படுவதற்கு வழிகோலும் யுத்தத் தயாரிப்புகள் அல்ல' என்று எல். ஐ. பிரஷ்னேவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 26-வது காங்கிரஸில் சமாதானத் திட்டத்தை முன்வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகளும் சர்வதேசப் பதட்டத்தைத் தணித்த இடைவிடாத போராட்டத்தின் காரணமாக சமாதானமா அல்லது யுத்தமா-இணக்கமா அழிவா, அல்லது அழிவு ஆயுதங்களைப் பெருமளவில் சேமித்து வைப்பதா-என்ற நிலைக்கு முடிவு காணவேண்டிய அவசியம் மேலும்மேலும் அதிகரித்துவருகிறது. 1981-ம் ஜூன் 23-ம் திகதி உலகின் பாராளுமன்றங்களுக்கும் மக்களுக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

"ரஷ்யாவின் தேசங்களது உரிமைப்பிரகடனம்" 1917 நவம்பர் 16ல் வெளியிடப்பட்டது. அது சோவியத் தேசிய இனக் கொள்கையின் கோட்பாடுகள் சுதந்திர ரஷ்யாவின் தேசங்களுடைய பொருளாதார அமைப்பின் ஆதாரங்கள் ஆகியவற்றைப் பிரகடனப்படுத்திற்று. எல்லா தேசங்களின் சரிசமத்துவம், அரசுரிமை, தனியாகப் பிரிந்து சென்று சுதந்திர நாடுகளாக அமைய வசதி செய்துகொள்ள உரிமை, தேசிய சலுகைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் ஒழிப்பு, ரஷ்யப் பிரதேசத்தில் வசிக்கும் தேசிய சிறுபான்மையினரும் இனக்குழுக்களும் வளர்ச்சி பெறுவதற்கான சுதந்திரம் ஆகிய இவை யாவும் முக்கிய கோட்பாடுகளில் அடங்கும்.

சோவியத் அரசாங்கம் தேசிய இனக் கொள்கையின் கோட்பாடுகளை தெளிவுபடுத்தியதுடன் நின்றுவிடவில்லை. அந்தக் கோட்பாடுகளை [illegible]னில்லாமலும் ஆழ்ந்த அக்கறையுடனும் நடைமுறையில் அனுசரிக்கவும் செய்தது. ரஷ்யாவின் தேசங்களது உரிமைப்பிரகடனம் வெளியிடப்பட்டு ஒரு மாதம் கழிந்த பின்னர் பின்லாந்து அரசாங்கம் தனது நாடு சுயேச்சையாக வாழ விரும்புவதாகத் தெரிவித்தது.

ஆனால் 1917-ம் ஆண்டுக்குப் பின்னால் "[illegible]" [illegible] பொதுத் தாயகமாக சோஷலிசத்தின் தாயகமாக மாற்றமடைந்துவிட்ட இந்த மாபெரும் நாட்டிலிருந்து பிரிந்து செல்ல முன்னைய ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த தேசங்கள் விரும்பவில்லை.

இந்தப் "பிரகடனம்" மாபெரும் அரசியல், சட்ட

## தெரிவு

(யாழ்ப்பயணம்)

இலங்கைத் தமிழாசிரியர் சங்க யாழ். மாவட்ட நடப்பாண்டு உத்தியோகத்தர் தெரிவில் பிரசாரச் செயலாளராகப் புத்தெளி ந. சிவனாதன் போட்டி எதுவுமின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பரீட்சை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்தொடர்ந்து சங்கீதம்கற்க முடியாமல் பாதிப்படைவதுடன் சங்கீத பாடத்தை இடைநடுவில் நிறுத்த வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது?

ஆதலினால் மேற்படி நிபந்தனையை 5-ம் ஆண்டுக்கு இல்லாமல் தளர்த்தி, அதனை மறுபரிசீலனை செய்து ஆறாம் ஆண்டுக்கே கட்டாயமாக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இதனால் பல மாணவர் நன்மையடையக் கூடியதாக இருக்கும். மேற்கூறிய மாற்றத்தை உடன் நடைமுறைப்படுத்தி இசையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தன்மை நடைமுறைப் படுத்தச் செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

## கடையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர்கள் தலைமறைவாகி விட்டதாகவும் அவர்களை கைதுசெய்வதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இக்கொலைச்சம்பவத்தின் சாட்சிகளில் ஒருவரான டாக்ஸி சாரதியான சுப்பிரமணியம் ஜெயபாலன் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில மேலும் தெரிவித்திருப்பதாவது:

நான் சுமார் ஒருவருடகாலமாக டாக்ஸி சேவையைச் செய்து வருகிறேன் சம்பவம் நடைபெற்ற தினம் பகல் சுமார் ஒருமணியளவில நான் யாழ் புகையிரத நிலையத்துக்குச் சென்றேன் அங்கு அந்த நேரத்திலவரும் புகையிரதம் தாமதித்ததால் நான் பலாலி வீதிவழியாக வந்து கொண்டு இருக்கும் போது ஆரியகுளச் சந்தியில நின்ற சுமார் ஆறு பேர் என்னை மறித்தார்கள்.

விஜயன் என்பவர் கே.கே.எஸ். ரோட்டுக்கு போக வேண்டும்'' என்றார் அவருடன் மேலும் 4பேர் எனது டாக்ஸியிலேறினார்கள் விஜயனையும் அவர் பெயரையும் எனக்குத் தெரியும் ஏனைய நாலுபேரையும் தெரியும் ஆனால் பெயர் தெரியாது. முன் சீட்டில இருந்த விஜயன் பின் சீட்டில இருந்த இறந்தவரான பிரேம காந்தனைபார்த்து "கடையில என்னடா சேட்டை விட்டாய் என்று கேட்டார் அதற்கு இறந்தவர் "நான் கடைப் படிகூட ஏறவில்லை என்றும் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் தெரிவித்தார்.

அப்போது டாக்ஸி தமிழ்ப் பண்ணை புத்தகக் கடையடியில வந்துகொண்டிருந்தது. அவ்விடத்தில நிற்பாட்டும் படி சொன்னார்கள் நான் நிற்பாட்டினேன் பின்னர் எலலோரும் அருகில உள்ள ஒழுங்கைக்குச் சென்றார்கள் விஜயன் எனது டாக்ஸி கூலி 7ரூபாவுக்குப் பதில 5ரூபா தந்தார். பின்பு நான் எனது கடைக்குச் சென்றேன். (க)

## சிமெந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மின்னவர்களின் ஆலோசனைகளைப் பெறத் தவறுவதாலும், வீண் விரயங்களாலும்சீமெந்து தொழிற்சாலை உற்பத்தியில் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாமல் இருக்கிறது.

## தமிழ்மொழி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் கூற பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுந்து ''உருப்படியான ஒன்றும் இல்லை'' என்றார்.

சபாநாயகர்: ''உங்கள் தலைவரும் ஜனாதிபதியும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்கள்......''

பண்டிதர் கா. பொ.: 'அவர்கள், வரவுசெலவு கணக்கு களைவு பற்றித்தான் பேசுகின்றார்கள்'

சபாநாயகர்: "எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்ற வேண்டாம்."

பண்டிதர் கா. பொ.: 'புரையோடிய புண்ணுக்கு புனுகு பூசுவதில் பலனில்லை' (ம)

## உலகத் தமிழர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுகிறது மாநாட்டில் உலகெங்கிலுமுள்ள தமிழர்களின் பண்பாடு, அறிவியல், மொழி வளர்ச்சி பற்றி ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. சாள்ஸ் இளந்திரையன், திரு. கே.வீரமணி ஆகியோர் உட்படப்பலர் உரையாற்றவுள்ளனர். (ஸ)

## 16 பேர்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தால் மேற்கொண்டும் விவரங்கள் வெளியிட அவர் மறுத்து விட்டார்.

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் வைத்து இரு பெண்கள் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிருவரும் யாழ். நீதவான் திரு. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது இம்மாதம் 9-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (மா)


சுப்பர் லைட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்

ஸ்தாபனத்தாரின் மகிழ்வான செய்தி

உங்கள் பயணம் சொகுசானதாக அமைய
ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பயணச் சேவை
கொழும்பு - யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை
காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் - கொழும்பு

நீண்டகாலமாக யாழ்ப்பாண மக்கள் அனுபவித்து வந்த கஷ்டத்தை நீக்கும்பொருட்டு பல லட்ச ரூபா செலவில் சிங்கப்பூரிலிருந்து வருவிக்கப்பட்ட பொறியியலாளர்களின் மூளைவளங்களை பயன்படுத்தி அவர்களது நேரடி கண்காணிப்பில் உள்ளூரில் நிர்மாணிக்கப்பட்ட

உறங்கல் இருக்கை வசதி கொண்ட

'லக்ஸறி ருறிஸ்ட் பஸ்கள்''

சேவைக்கு விடப்படுகின்றன.

நீண்டதூர பயணத்தை மகிழ்வுடனும் லாபத்துடனும் கடக்கலாம்.

கட்டணம்:

ரூபா 65-00 (ஒரு வழிப்பயணத்திற்கு மட்டும்)

புறப்படும் நேரங்கள்

★ தினசரி பிற்பகல் 6-30 மணிக்கு காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்து, இரவு 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அதிகாலை 5-30 மணிக்கு கொழும்பு சென்றடைந்து தெகிவளை சந்தி வரை சேவையாற்றும்.

★ தினசரி பிற்பகல் 6-45 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திலிருந்து கொழும்பு ஒல்கொட் மாவத்தை (கோட்டை புகையிரத நிலையம் முன்பாக) வந்தடைந்து அங்கிருந்து இரவு 8-30மணிக்கு புறப்பட்டு அதிகாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக காலை 6-15 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

கொழும்பு

ஜே. எம். எஸ். மிரண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11.
போன்: 27031

லெக்ஷ்மி பவான்
(பிராமணாள் ஹோட்டல்)
97, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11. போன்: 24821, 28244

யாழ்ப்பாணம்

ஸ்ரீ இராமகிருஷ்ணா,
இல. 9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7497, 7065

ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்,
141, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்,
போன்: 660.

காங்கேசன் ரவல்ஸ்,
பிரதான வீதி,
காங்கேசன்துறை.
போன்: 34

தலைமையகம்

சுப்பர் லைட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்

97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
போன்: 24821, 28244



மரண அறிவித்தல்

--முருகேசு கோபாலபிள்ளை--

நயினாதீவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்தவருமான முருகேசு கோபாலபிள்ளை காலமாகிவிட்டார். ஈமக் கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். (1404)



மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா ஆசைப்பிள்ளை

திருமதி நாகம்மா ஆசைப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னுக்கோன் ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், இரத்தினராசா, ஆனந்தராசா, திருமதி விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார், அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக இல, 2, கண்டிவீதி, நாவற்குழி இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 1405



ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்

கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். மெட்டல்சேல்ஸ்சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

J. M. S. மிராண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

கட்டணம் ரூபா 65-00


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 7-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8186.